(ஆ) விலை குறைக்கும் வகையில் குறைந்த எடை உள்ள பட்டு புடவைகளும், ஜரிகை எந்தளவுக்கு குறைக்க முடியுமோ அந்த ளவுக்கு குறைக்கவும் திட்டமிடப்பட்டு சேலைகள் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் எகிப்திய அழகி கிளியோபாட்ராவிற்கு, நம் நாட்டி லுள்ள பட்டுச் சேலைகளை, ஒரு தீப்பெட்டியிலே வைத்து அடைத்து அதை அந்த அம்மையார் அணி வதற்காக அனுப்பியதாகக் கேள்வி. இப்போது ஏன் அது தரம் குறைந்துவிட்டது? இப்போது அந்தமாதிரி பட்டுத் துணி தயாரிப் பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுத்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப் புடவைகள், பட்டு வேஷ்டிகள் தரமாகத்தான் நெய்யப்படுகின்றன. வெங்கடாசலபதிக்குக் கூட, சேலத்திலிருந்துதான் நெய்யப்பட்டு, அனுப்பப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சினிமாக்களில் அதாவது நியூஸ் வருகிறது. இந்த ‘கோல்கேட் பேஸ்ட்டை இந்த நடிகை உபயோகப்படுத்தியதனால் தான் பல் நன்றாக இருக்கிறது. சோப்-இந்த சோப்பை இந்த நடிகை உபயோகப்படுத்துகிறார், அதை உபயோகப்படுத்தினால் அது உடலுக்கு நல்லது என்று விளம்பரப்படுத்துகிறார்கள். அதே மாதிரி, கோ-ஆப்டெக்ஸில் தயாரிக்கப்படுகின்ற சேலைகள், பட்டுத் துணிகளை எல்லாம் ஒரு விளம்பரப் படமாக எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கூட, ‘சிந்துபைரவி, என்ற புடவையை அறிமுகப்படுத்தினோம். ஏற்கனவே கூட, இது மாதிரி சினிமா நட்சத்திரங்கள் உபயோகப்படுத்துகிற புட வைகள் என்று கூட விளம்பரம் செய்து இருக்கிறோம். இதற்காக தனியாக ஒரு திரைப்படமே தயாரிக்கப்பட்டிருக்கிறது. ‘சூஸ்மென்‘ என்பது அந்தத் திரைப்படத்தின் பெயர்.

சென்னிமலை நெசவாளர்களுக்கு வீடுகள்.

790—*(வினா எண் 8069) திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னிமலையில் நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே சென்னிமலையில் நெசவாளர்களுக்கு 332 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

திரு. கா. செ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னிமலையில் 5000 கைத்தறி நெசவாளர்களுக்கு மேலாக இருக்கிறார்கள். 40-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. வீடுகளினுடைய தேவை அதிகமாக இருக்கின்றது. அங்கே 'வெப்பிலி'-க்கு அருகாமையில் 20 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதனை தற்போது தனியார்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்திலே வீடு கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தில், சம்பந்தப் பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிலங்களை இலவசமாக அளித்தால்தான் அரசு வீடு கட்டிக் கொடுக்க முயலும்.

திரு. கா. செ. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களிடத்திலே கூலிக்கு நெசவுத் தொழில் செய்கின்ற நெசவாளர்கள் அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். இங்கே நான் குறிப்பிட்ட நிலமானது அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாக இருக்கிறது அதனை தனியார்கள் தற்போது அதிகமாக ஆக்கிரமித்து வருகிறார்கள். ஆகவே, அந்த நிலத்தை அரசு எடுத்துக் கொண்டு அந்த இடத்தில் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட துணை இயக்குநரிடம் சொல்லி இது மாதிரி நிலத்தை ஒதுக்க ஏற்பாடு செய்தால் அரசு வீடு கட்டிக் கொடுக்க முன் வரும்.

விசைத்தறியில் லுங்கிகள் தயாரித்தல்.

791—*(வினா எண் 9345) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு ஆயத் தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—